# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF MAHILA COURT, PERAMBALUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br><br>Preliminary Register<br>**Sessions** | **Spl.Sessions Case No. : 15/2020** |

| Deposition of witness for | | | | |
|---|---|---|---|---|
| | **Prosecution** | : | **P.W. : 5** | |
| | Defence | : | D.W. : | |
| | Court | : | C.W. : | |

| | | | |
|---|---|---|---|
| **Name** | காமாட்சி | **Age** | 22 |
| **S/o. (or) W/o.** | மணிகண்டன் | **Calling** | |
| **Village** | குரும்பலூர் | **Caste** | |
| **Taluk** | பெரம்பலூர் | **Religion** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 14.10.2020**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் குரும்பலூரில் வசித்து வருகிறேன். இவ்வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பு வழக்குரைஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸார் என்னை விசாரித்தார்கள் என்றும், விசாரணையின்போது நான் சங்கர் மற்றும் பழனியம்மாள் இருவரும் விவசாய கூலி வேலை

பார்த்து வருகிறார்கள் என்றும், இருவரும் புதிதாக் குரும்பலூருக்கு வந்து வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றும், கொஞ்ச நாட்களுக்கு முன்னாடி பழனியம்மாள 3 பிள்ளைகளை அழைத்து வந்து அவர்கள் வீட்டில் வைத்திருந்தார் என்றும், நான் யார் என்று கேட்டபோது எங்க சொந்த கார பொண்ணு என்று சொன்னார் என்றும், நான் அதன்பிறகு எதுவும் கேட்கவில்லை என்றும், அப்புறம்தான் தெரிந்தது சின்னவடலாடி கிராமத்தை சேர்ந்த விஜயகுமாரி மற்றும் குமார் என்பவருக்கு பணம் கொடுத்து இருந்ததாகவும், அந்த பணத்தை அவர்கள் திரும்பி தராததால் அதற்காக அவர்களது 3 பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு வந்து வைத்திருப்பதாகவும், அந்த பெரிய பெண் பாதிக்கப்பட்ட சிறுமியிடம் பழனியம்மாள் புருஷன் சங்கர் தப்பாக நடந்து கொண்டதை கேள்விப்பட்டேன் என்றும், அவங்க அம்மா விஜயகுமாரி என்பவர் புகார் கொடுத்திருப்பதாகவும், என்னை விசாரித்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.